[1993 ஏப்ரல் 27

484—

நாகப்பட்டினத்திற்கு கூடுதலாக பேருந்து விடுதல்.

*14411 திரு. ஜி. பழனிசாமி:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம், முத்துப்பேட்டை-திருத்துறைபூண்டி வழியாக நாகபட்டினத்திற்கு கூடுதல் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டையிலிருந்து முத்துப்பேட்டை, திருத்துறைப் பூண்டி வழியாக நாகப்பட்டினத்திற்கு கூடுதலாக நடைகள் இயக்குவதற்கான நடவடிக்கைகள் சோழன் போக்குவரத்துக் கழகத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினத்திற்கு முத்துப்பேட்டையிலிருந்து பேருந்துகள், அந்த மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின்னால், அந்த மாவட்டத் தலைநகரத்திற்கு ஏற்கெனவே ஓடிக் கொண்டிருந்த பேருந்துகளெல்லாம், அதாவது அரசுப் பேருந்துகள், எரிபொருள் தட்டுப்பாடு என்ற காரணத்தினால் எடுக்கப்பட்டது. அதற்குப் பின்னாலும் கூட அமைச்சர் அவர்கள் தொடர்ந்து அந்த பஸ்களெல்லாம் விடப்படும் என்றெல்லாம் சொன்னார்கள். இன்றையவரையில் அந்த பஸ்கள், எரிபொருள் தட்டுப்பாடு என்ற காரணத்தினால், நிறுத்தப்பட்ட பஸ்கள் ஓடவில்லை. அந்த மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு அந்தப் பகுதி யிலுள்ளவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கோ மற்ற அலுவலக வேலையாகச் செல்லக்கூடியவர்களுக்கோ வசதி யாக பஸ்களை உடனடியாக இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் வழியாக, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை தடத்தினுடைய நீளம் 90.60 கிலோ மீட்டர் ஆகும். அந்த வழியாகப் புறநகர்ப் பேருந்துகள் 20 எண் மூலமாக 66 நடைகளும், தனியார் பேருந்துகள் 10 எண் மூலமாக 42 நடைகளும் இத்தடத்திலே இயக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்

டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக சில பேருந்துகள் நிறுத்தப் பட்டதாகக் குறிப்பிட்டார்கள். இதுவரையிலும் அவர் என்னிடத்திலே அதுபோன்ற குறிப்புகளைத் தரவில்லை. அப்படி ஏதாவது இருக்குமானால், உடனடியாக அந்தப் பேருந்துகள் நாளையே இயக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 485 டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

485—

செங்கத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனை, சிற்றுண்டிச் சாலை நிறுவுதல்.—

*14468 டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கத்தில் போக்குவரத்துக் கழகப் பணிமனையும் மற்றும் சிற்றுண்டிச்சாலையும் நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

முற்பகல் 10–20

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதியில், செங்கம், புதுப்பாளையம் ஆகிய ஒன்றியங்களில் 7 டவுன் பேருந்துகள் செல்கின்றன. அதுமட்டுமல்ல, செங்கம்-சென்னை, செங்கம்-பெங்களூர் ஆகிய வழித்தடங்களில் கிட்டத்தட்ட 20 பேருந்துகள் செங்கத்தில் பணிமனை இல்லாத காரணத்தாலே திருவண்ணாமலையில் சென்று தங்கி விடுகின்றன. செங்கத்திலேயிருந்து திருவண்ணாமலை சென்று மீண்டும் திரும்பி வர வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ஒரு பஸ் 70 கிலோ மீட்டருக்குத் தேவையில்லாத பயணம் செல்ல வேண்டும். 20 பஸ்கள் என்றால் 1,400 கிலோ மீட்டர்

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS